Q.C-59

# DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

| Name of the Test: | Departmental Test for appointment as Assistant Audit Officers in the Audit wing of the Hindu Religious and Charitable Endowments (Admn.) Department - Part - II (a) Accounts and Audit of Hindu Religious Institutions (Theory & Practical) (Without Books) | 130 |
|---|---|---|

Maximum Time: 2.30 Hour

Maximum Marks: 100

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
   இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
   வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
   இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
   விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

1. Whom of the following administers the Math?
மடங்களை நிர்வகிக்கும் அதிகாரம் கீழ்க்கண்ட யாருக்கு உள்ளது?

(A) Commissioner
ஆணையர்

(B) Assistant Commissioner
உதவி ஆணையர்

(C) Thambiran
தம்பிரான்

(D) Madathipathi
மடாதிபதி

2. Which of the following expenditure head is related to Administrative expenses?
கீழ்க்கண்ட செலவு தலைப்புகளில் நிர்வாக செலவுகளாக எவை குறிக்கப்படுகிறது?

(A) Salary
சம்பளம்

(B) Electrical charges
மின் கட்டணம்

(C) Tax
வரிகள்

(D) Nithyapadi
நித்யபடி

3. Which of the following "Income Head" is not accountable on arriving the assessible income?
கீழ்க்கண்ட எந்த வரவு தலைப்பு நிகர வரி விதிப்புக்கு வருமானமாக கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை?

(A) Rental income
வாடகை

(B) Lease amount
குத்தகை

(C) Hundial income
உண்டியல்

(D) Loans recovered
வசூலிக்கப்பட்ட கடன் தொகை

4. Excess expenditure made against the budget sanctioned, should got ratified within the following period

அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவு திட்டத்தை விட ஏற்படும் மிகை செலவுகளுக்கு கீழ்க்கண்ட எந்த காலத்திற்குள் பின்னேற்பு பெறப்பட வேண்டும்?

(A) 15 days
15 நாட்கள்

(B) one month
ஒரு மாதம்

(C) two months
இரண்டு மாதங்கள்

(D) two weeks
இரண்டு வாரங்கள்

5. As per Section 36, surplus fund cannot be utilized for which among the following purpose?

திருக்கோயில் கணக்கில் செலவு போக மிகுதியாக உள்ள நிதியினை கீழ்க்கண்ட எந்த காரணத்திற்கு சட்டப்பிரிவு 36ன்படி செலவிட இயலாது?

(A) Hindu marriages
இந்து திருமணங்கள்

(B) Education expenses
கல்வி செலவு

(C) Feeding the poors
ஏழைகளுக்கு அன்னதானம்

(D) Constructing shed for feeding poors
அன்னதானக் கூடம் கட்டுதல்

6. Which of the following leave can be sanctioned half of the pay and allowances to a non hereditary servant of an institution?

பரம்பரை அல்லாத ஒரு அறநிறுவன பணியாளருக்கு கீழ்க்கண்ட எந்த வகை விடுப்புக்கு மட்டும் அரை மாத சம்பளம் மட்டும் படிகளை அனுமதிக்க இயலும்?

(A) E.L. with M.C
மருத்துவ சான்றின் பேரிலான ஈட்டிய விடுப்பு

(B) Casual leave
தற்செயல் விடுப்பு

(C) Maternity leave
மகப்பேறு கால விடுப்பு

(D) U.E.L. on private affairs
சொந்த காரணங்களுக்கான ஈட்டா விடுப்பு

7. Pay and emoluments of a temple servant will be in accordance with
திருக்கோயில் பணியாளர்களின் சம்பளம் மற்றும் இதர படிகள் கீழ்க்கண்ட எதன் அடிப்படையில் அமையும்.

(A) age
வயது

(B) schedule of establishment
பணியாளர் தொகுதி பட்டியல்

(C) educational qualifications
கல்வித் தகுதி

(D) date of joining
பணியில் சேர்ந்த நாளின்படி

8. Leave on Medical Certificate with full pay to an non hereditary servant may be allowed for
பரம்பரையல்லாத திருக்கோயில் பணியாளருக்கு மருத்துவ சான்றின் பேரிலான ஈட்டா விடுப்பு கீழ்க்கண்ட எத்தனை நாட்கள் வரை அனுமதிக்கலாம்.

(A) 120 days
120 நாட்கள்

(B) sixty days
அறுபது நாட்கள்

(C) 180 days
180 நாட்கள்

(D) ninety days
90 நாட்கள்

9. Leave on Medical Certificate may be combined with earned leave, and shall be limited to
மருத்துவ சான்றின் பேரிலான விடுப்பானது, ஈட்டிய விடுப்புடன் சேர்த்து துய்க்கப்படுவதனை கீழ்க்கண்ட எத்தனை நாட்களுக்குள் மிகாமல் இருத்தல் வேண்டும்.

(A) 60 days
60 நாட்கள்

(B) 120 days
120 நாட்கள்

(C) 85 days
85 நாட்கள்

(D) 90 days
90 நாட்கள்

10. Every Hundial should be opened once in a month in case of monthly collection is above

மாத வருமானம் கீழ்க்கண்ட எந்த தொகைக்கு மேல் உண்டியல் வருவாய் இருந்தால் மாதமொருமுறை திறக்கப்பட வேண்டும்.

(A) 5,000 (B) 10,000

(C) 1,000 (D) 3,000

11. The permission for Hundial opening should be obtained from Joint Commission if the assessible income falls between

கீழ்க்கண்ட எந்த நிகர வருமானம் இருக்கும் பட்சத்தில் திருக்கோயில் உண்டியல் திறப்பிற்கு இணை ஆணையரின் அனுமதி பெறப்படல் வேண்டும்.

(A) 10,000
10,000

(B) exceeding 10,000 and below one lakh
10,000 -க்கு மேல் 1 இலட்சத்துக்கு கீழ்

(C) below 10,000
10,000 க்கு கீழ்

(D) exceeding 10,000 and below ten lakhs
10,000 -க்கு மேல் 10 இலட்சத்துக்கு கீழ்

12. Every printed tickets and miscellaneous receipts should be accounted in

அச்சடிக்கப்பட்ட அனைத்து கட்டண சீட்டுகள் மற்றும் இரசீது புத்தகங்கள் எண்ணிக்கை இப்பதிவேட்டில் கணக்கில் கொண்டு வரப்பட வேண்டும்.

(A) MDR
பலவகை கேட்பு பதிவேடு

(B) Stocks Register
இருப்பு விவரப் பதிவேடு

(C) Money Valued Form
பண மதிப்புள்ளவைகள் பதிவேடு

(D) Kanikai Register
காணிக்கை பதிவேடு

13. Which of the following post in temple is relating with festivals performed in temples?
திருக்கோயில் திருவிழாக்கள் பணிகள் கீழ்க்கண்ட எந்த பணியிடத்துடன் தொடர்புடையது?

(A) Paricharakar
பரிச்சாரகர்

(B) Store keeper
ஸ்டோர் கீப்பர் (பண்டக காப்பாளர்)

(C) Maniam
மணியம்

(D) Accountant
கணக்கர்

14. Which of the following post is related to Madapalli?
கீழ்க்கண்ட எந்த பணியிடம் மடப்பள்ளி பணியுடன் தொடர்புடையது

(A) Paricharakar
பரிச்சாரகர்

(B) Archakar
அர்ச்சகர்

(C) Peshkar
பேஷ்கர்

(D) Adyabagar
அத்யாபகர்

15. Which of the following post is not related with preparing Neivedhyam?
கீழ்க்கண்ட பணியாளர்களில் நெய்வேத்யம் தயாரிப்பதில் தொடர்பில்லாதவர் யார்?

(A) Suyambagi
சுயம்பாகி

(B) Paricharakar
பரிச்சாரகர்

(C) Sannathi
சன்னதி

(D) Battachari
பட்டாச்சாரி

16. It is against to Section 103 and 106(2) Rule 3 of HR and CE Act – regarding which of the following expenditure?
சட்டப்பிரிவு 103 (ம) 106 (2) விதி 3-ன்படி கீழ்க்கண்ட முறையிலான செலவு விதம் தவறானது – அது எது?

(A) expenditure by cheque
காசோலை மூலம் செலவு

(B) cash withdrawal from bank
வங்கியிலிருந்து ஈர்த்து செலவிடுதல்

(C) direct expenditure
நேரடியாக பணத்தை செலவிடுதல்

(D) none of the above
இவற்றுள் எதுவுமில்லை

17. To a "works" valuing 1,50,000 – 2% of Income Tax and 15% of service charge was deducted. What was the amount paid to the work after deduction?
ரூ.1,50,000 க்கான திருப்பணி நடைபெற்றதில் 2% வருமான வரி மற்றும் சேவை வரி 15% போக வழங்க வேண்டிய தொகை கீழ்க்கண்டவற்றுள் எவை?

(A) 1,45,000 (B) 1,46,250
(C) 1,46,650 (D) 1,46,450

18. Any kind of revenue of an institution should be credited in I[st] account as per Rule
அறநிறுவனத்தின் வரவுகள் அனைத்தும் அதன் வங்கி கணக்கான முதல் கணக்கிலேயே வரவு வைத்திடல் வேண்டும் என இந்த விதியின்படியாகும்?

(A) 116 (2) (X) of Rule 7 (B) 116 (2) (X) of Rule 4
(C) 116 (2) (X) of Rule 5 (D) 116 (2) (X) of Rule 6

19. Any collections made on issual of temporary receipts should be brought into temple account within how many days from the date of collection?
தற்காலிக இரசீதுகள் மூலம் வசூலிக்கப்படும் அனைத்து வரவும் எத்தனை நாட்களுக்குள் திருக்கோயில் கணக்கில் வரவு வைத்திடல் வேண்டும்?

(A) two days
இரண்டு நாட்கள்

(B) seven days
ஏழு நாட்கள்

(C) twelve days
12 நாட்கள்

(D) 24 hours
24 மணி நேரம்

20. Assessible income of the temple institution is Rs. 15,000 in which salary expenses 5,000; T.A. Expenses 1,000 and Nithya Pooja Expenses is Rs. 4,000. Find the establishment charges?
நிகர வரி விதிப்பு வருமானம் ரூ.15,000 சம்பள செலவு ரூ.5,000 பயணப்படி ரூ.1,000 மற்றும் நித்ய பூஜை செலவு ரூ.4,000 எனில் நிர்வாக செலவின் சதவீதம் என்ன?

(A) 25% (B) 33%
(C) 67% (D) 40%

21. Women temple employees are eligible for maternity leave for the following days?
திருக்கோயில் பணியாளர்களில், பெண் பணியாளர்களுக்கு கீழ்க்கண்ட எத்தனை நாட்கள் மகப்பேறு விடுப்புக்கு அனுமதி வழங்கப்படுகிறது?

(A) 100 days
100 நாட்கள்

(B) 60 days
60 நாட்கள்

(C) 30 days
30 நாட்கள்

(D) 90 days
90 நாட்கள்

22. Form No. 25 is a prescribed format related with the income of
படிவம் 25 – எதன் வசூலினை கண்காணிக்க உதவும் படிவமாகும்.

(A) Hundial Assortment Book
உண்டியல்கள் விவரப்புத்தகம்

(B) Prasadam
பிரசாதம்

(C) Rent
வாடகை

(D) Miscellaneous Revenue
பலவகை வருவாய்

23. Which one of the following register is not listed in 1 to 15 registers?
கீழ்க்கண்ட எந்த பதிவேடு 1 – 15 பதிவேடுகள் பட்டியலில் சேராதது?

(A) Kattalai lands
கட்டளை நிலங்கள் பதிவேடு

(B) Temple Poramboke Lands
ஆலய புறம்போக்கு நிலப்பதிவேடு

(C) Dhittam
திட்டப்பதிவேடு

(D) Trees
மரங்கள் பதிவேடு

24. As per Section 58(3), Revision or Alteration in Dittam should be made once in how many years
சட்டப்பிரிவு 58 (3)-ன் படி கீழ்க்கண்ட எத்தனை ஆண்டுக்கு ஒரு முறை திட்டம் புதுப்பிக்கப்பட வேண்டும்.

(A) ten years
பத்து வருடங்கள்

(B) annually
ஒரு வருடம்

(C) five years
ஐந்து வருடம்

(D) three years
மூன்று வருடம்

25. As per 1959 HR and CE Act – 116 (2) (13) rule 5 (5) the tenant should fulfill the following condition
1959-ம் வருட இ.ச.அறநிலைய சட்டப்பிரிவு 116 (2) (13) விதி 5 (5)-ன்படி வாடகைதாரர் கீழ்க்கண்ட எதனை திருப்திபடுத்துதல் வேண்டும்?

(A) Increase in rent
வாடகை உயர்வு

(B) Rental agreement
வாடகை ஒப்பந்தப் பத்திரம்

(C) Rental deposits
வாடகை வைப்பு தொகை

(D) Collection of Nankodai
நன்கொடை

26. The punishing power to trustees in respect of office holders is dealt in what section?
திருக்கோயில் நிர்வாகிக்கு தண்டனை வழங்கும் அதிகாரம் எந்த சட்டப்பிரிவுதனில் கூறப்பட்டுள்ளது?

(A) Section 46
சட்டப்பிரிவு 46

(B) Section 41
சட்டப்பிரிவு 41

(C) Section 56
சட்டப்பிரிவு 56

(D) Section 92
சட்டப்பிரிவு 92

27. The Commissioner is empowered to sanction write off for which of the following amount?
ஆணையரால் கீழ்க்கண்ட எந்த தொகை வரை உள்ள வாரா கடன்களை தள்ளுபடி செய்து உத்தரவிட இயலும்

(A) 10,000
(B) 25,000
(C) 15,000
(D) 20,000

28. The Annual assessible income of the religious institution is Rs. 45,000. Find out the contribution fees to be paid by the institution?
ஒரு அறநிறுவனத்தின் நிகர வரி விதிப்பு வருமானம் ரூ.45,000 ஆகும், எனில் அந்நிறுவனம் செலுத்த வேண்டிய சகாயத்தொகை எவ்வளவு?

(A) 4,500
(B) 5,400
(C) 2,250
(D) 1,000

29. The second account of the institution shall not exceed the limit as shown below of the annual expenditure of the temple.
அறநிறுவனத்தின் இரண்டாம் கணக்கிலுள்ள மொத்த இருப்பு தொகையானது ஆண்டு சராசரி வருமானத்தில் கீழ்க்கண்ட அளவிற்கு உட்பட்டிருத்தல் வேண்டும்?

(A) one fifth
ஐந்தில் ஒரு பாகம்

(B) one twelfth
பண்ணிரெண்டில் ஒரு பாகம்

(C) one tenth
பத்தில் ஒரு பாகம்

(D) no limitation
அளவுகள் ஏதும் இல்லை

30. FORM – 38 helps to monitor
படிவம் எண் - 38 ன் கீழ் எதன் இருப்பு விவரம் கண்காணிக்கப்படுகிறது?

(A) Sale of Prasadam
பிரசாதம் விற்பனை

(B) Stock register of receipt and expenditure of stores
பண்டக வரவு செலவு இருப்பு

(C) Kanikai
காணிக்கைகள்

(D) Register of write off
தள்ளுபடி தொடர்பான விவரங்கள்

31. Which one is not a Capital Head in the expenditure side?
கீழ்க்கண்ட எது செலவின் மூலதன தலைப்பில் சேராதது?

(A) Investment (surplus)
உபரி நிதி முதலீடு

(B) Reinvestments
மறு முதலீடு

(C) Property tax
சொத்து வரி

(D) Deposits given to lease
வாடகை வைப்பு திருப்பியது

32. No receipts shall be deposited in the second account opened in the name of the executive officer as per the following rule
அறநிறுவனத்திற்கான எந்த வரவும் இரண்டாம் வங்கி கணக்கில் கீழ்க்கண்ட விதியின்படி வரவு வைத்தல் கூடாது?

(A) 116 (2) (X) of Rule 5 (a)
116 (2) (X) விதி 5 (a)

(B) 116 (2) (X) of Rule 1
116 (2) (X) விதி 1

(C) 116 (2) (X) of Rule 7 (b)
116 (2) (X) விதி 7 (b)

(D) 116 (2) (X) of Rule 2
116 (2) (X) விதி 2

33. The Annual income of the religious institution is Rs. 2,25,000, then what will be the percentage of contribution fees to be levied?
ஒரு அறநிறுவனத்தின் ஆண்டு வருமானம் ரூ.2,25,000 எனில் செலுத்த வேண்டிய சகாயத் தொகை எவ்வளவு?

(A) 7%
(B) 11%
(C) 6%
(D) 4%

34. The income of an institution is Rs. 50,000 then find the amount of deduction in lieu of Oru Kala Pooja
ஒரு அறநிறுவனத்தின் ஆண்டு நிகர வருமானம் ரூ.50,000 எனில் ஒரு கால பூஜை தொகையாக கழிக்க வேண்டிய தொகை எவ்வளவு?

(A) 1,000
(B) 3,000
(C) 6,000
(D) 2,000

35. For all institutions whose income is exceeding Rs. 2 lakhs and in such cases, the Our Kala Pooja cost allowed is
இரண்டு இலட்சத்திற்கு மேல் நிகர வரி விதிப்பு வருமானம் உள்ள அனைத்து திருக்கோயில்களுக்கும் அதிகபட்சமாக கீழ்க்கண்ட என்ன தொகை ஒரு கால பூஜைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளது

(A) Rs. 10,000
(B) Rs. 5,000
(C) Rs. 15,000
(D) Rs. 20,000

36. Copper and Brass items should be entered in Kanikai register and then in
செம்பு மற்றும் பித்தளை காணிக்கை பொருட்கள் காணிக்கை பதிவேட்டிலிருந்து கீழ்க்கண்ட எந்த பதிவேட்டில் வரவு வைக்கப்பட வேண்டும்?

(A) Money valued Register
பண மதிப்புள்ளவைகள் பதிவேடு
(B) Parimuthu Register
பரிமாத்து பதிவேடு
(C) Property Register
சொத்து பதிவேடு
(D) Permanent Article Register
நிரந்திர பொருட்கள் இருப்பு பதிவேடு

37. All permanent employees of a religious institution on retirement shall encash maximum of the following earned leave in lieu of cash
திருக்கோயில் பணியாளர்கள் ஓய்வு பெறும்பொழுது அதிகபட்சமாக கீழ்க்கண்ட எத்தனை நாட்கள் ஈட்டிய விடுப்பினை காசாக்கிக்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

(A) ninety days
90 நாட்கள்
(B) 240 days
240 நாட்கள்
(C) 120 days
120 நாட்கள்
(D) 180 days
180 நாட்கள்

38. No persons shall be appointed in the non–hereditary office unless he/she has completed the following age
பரம்பரை அல்லாது வெளித்துறை பணியாளராக ஒருவரை பணி நியமனம் செய்வதற்கான குறைந்தபட்ச வயது எவ்வளவு?

(A) 25 years
25 வயது

(B) 18 years
18 வயது

(C) 20 years
20 வயது

(D) 21 years
21 வயது

39. The auction of all leases should be conducted within a period shown below from the date of the decision
அனைத்து குத்தகை ஏலங்களும் அவற்றினை நடத்த உத்தேசிக்கப்பட்ட கீழ்க்கண்ட எந்த குறிப்பிட்ட காலத்திற்குள் நடத்தி முடிக்கப்படல் வேண்டும்?

(A) one week
ஒரு வாரம்

(B) one month
ஒரு மாதம்

(C) three days
மூன்று நாட்கள்

(D) five days
ஐந்து நாட்கள்

40. The notice of auction of all leases shall be published atleast, how many days before the auction date?
குத்தகை ஏலம் தொடர்பாக குறைந்தபட்சம் கீழ்க்கண்ட எத்தனை நாட்களுக்கு முன்னர் விளம்பரம் செய்யப்படுதல் வேண்டும்.

(A) 10 days
10 நாட்கள்

(B) one week
ஒரு வாரம்

(C) 15 days
15 நாட்கள்

(D) 5 days
5 நாட்கள்

41. Fair rent fixation shall be revised for temple building once in how many years?
காலமுறை வாடகை உயர்வு – திருக்கோயில் கட்டிடங்களுக்கு எத்தனை ஆண்டுக்கு ஒரு முறை வாடகை உயர்த்தப்படுகிறது?

(A) one year
ஒரு வருடம்

(B) two years
இரண்டு வருடங்கள்

(C) three years
மூன்று வருடங்கள்

(D) four years
நான்கு வருடங்கள்

42. The Monetary limit of rent remission for Commissioner is
ஆணையருக்கான வாடகை தள்ளுபடிக்குரிய பண அளவை என்ன?

(A) Exceeding Rs.1,000 and not exceeding Rs.5,000
ரூ.1,000-க்கு மேலும் ரூ.5,000-க்கு மிகாமலும்

(B) Exceeding Rs. 5,000 and not exceeding Rs. 10,000
ரூ.5,000-க்கு மேலும் ரூ.10,000-க்கு மிகாமலும்

(C) Above 10,000
ரூ.10,000-க்கு மேல்

(D) Rs. 1,000 to Rs. 15,000
ரூ.1,000-க்கு மேலும் ரூ.15,000-க்கு மிகாமலும்

43. The Retirement age for a non hereditary office servant after regular appointment shall be
அறநிறுவனங்களில் பணிபுரியும் பரம்பரை அல்லாத பணியாளர்களின் ஓய்வூதிய வயதானது

(A) 58 years
58 வயது

(B) 55 years
55 வயது

(C) 60 years
60 வயது

(D) 65 years
65 வயது

44. The Annual rental lease if exceeding the following amount shall be subject to veto power of the Commissioner
வருட குத்தகைக்கான ஏலத்தொகை கீழ்க்காணும் எந்த தொகைக்கு மேல் இருக்கும் பட்சத்தில் ஆணையரின் இரத்து ஆணைக்கு உட்பட்டு ஏலம் அங்கீகரிக்கப்படும்.

(A) Rs. 10,000 and above
ரூ.10,000-க்கு மேல்

(B) Rs. 1,000 and above
ரூ.1,000 -க்கு மேல்

(C) Rs. 5,000 and above
ரூ.5,000-க்கு மேல்

(D) Rs. 2,000 and above
ரூ.2,000-க்கு மேல்

45. In case of institutions whose income is above two lakhs – where the daily travelling allowance allowed for the trustee is
இரண்டு இலட்சத்திற்கு மேல் வருவாய் உள்ள திருக்கோயில் அறங்காவலருக்கு விதிகளின்படி நாளொன்றுக்கு கீழ்க்கண்ட எந்த தொகையினை பயணப்படியாக அனுமதிக்கலாம்.

(A) 15/-

(B) 20/-

(C) 30/-

(D) 40/-

46. Twenty five percentage of the total investments of an institutions should be made in
அறநிறுவனங்களின் மொத்த முதலீடுகளில் குறைந்தபட்சம் இருபத்தைந்து சதவீத முதலீடு கீழ்க்கண்ட எந்த நிறுவனத்தில் செய்திடல் வேண்டும்?

(A) Scheduled Banks
பட்டியலிடப்பட்ட வங்கிகள்

(B) Co–operative Banks
கூட்டுறவு வங்கிகள்

(C) Finance Corporations
நிதி நிறுவனங்கள்

(D) Nationalised Banks
தேசியமயமாக்கப்பட்ட வங்கி

47. Which of the following prescribed forms helps in monitoring the trees and thopes of an institution?
கீழ்க்கண்டவற்றுள், அறநிறுவனத்திற்கு சொந்தமான மரங்கள் மற்றும் தோப்புகள் இருப்பினை கண்காணிக்க உதவும் படிவம் எது?

(A) Form No. 12
படிவம் எண். 12

(B) Form No. 22
படிவம் எண்.22

(C) Form No. 50
படிவம் எண்.50

(D) Form No. 23
படிவம் எண்.23

48. In the case of institution with more than one trustee and an Executive Officer – where the custody of documents shall be with the
ஒன்று மேற்பட்ட அறங்காவலர்கள் மற்றும் செயல் அலுவலரும் உள்ள அறநிறுவனங்களின் விலையுயர்ந்தவைகள் மற்றும் ஆவணங்கள் கீழ்க்கண்ட யார் பொறுப்பில் இருக்கும்?

(A) Joint Custody
இருவரது பாதுகாப்பிலும்

(B) Executive Officer only
செயல் அலுவலர் மட்டும்

(C) Trustee only
அறங்காவலர் மட்டும்

(D) Assistant Commissioner of the Jurisdiction
அதிகார வரம்புக்கு உட்பட்ட உதவி ஆணையர்

49. Form 26 is prescribed for monitoring which income head of the institution
கீழ்க்கண்ட எந்த வருமானம் படிவம் 26-ன்படி கண்காணிக்கப்படுகிறது?

(A) Rental Income
வாடகை வரவு

(B) Lease Income
குத்தகை வரவு

(C) Ticket Charges
கட்டண வரவுகள்

(D) Hundial Assortment Register
உண்டியல் வரவு பதிவேடு

50. Period of probation for a temple staff appointed by direct recruitment shall be (from the date of joining)
நேரடி பணி நியமனம் செய்யப்பட்ட திருக்கோயில் பணியாளர்களுக்கு தகுதிகாண் பருவம் என்பது (பணியில் சேர்ந்த தேதியிலிருந்து)

(A) three years
மூன்று வருடங்கள்

(B) two years
இரண்டு வருடங்கள்

(C) one year
ஒரு வருடம்

(D) two years within continuous period of three years
மூன்றாண்டுக்கு இரண்டு ஆண்டு காலம் பணி முடித்திருத்தல்

51. The audit fees payable should be computed at a rate of 4% is the assessible income of the institution exceeds
திருக்கோயிலின் நிகர வரி விதிப்பு வருமானம் கீழ்க்கண்ட எவற்றிற்கு மேல் இருந்தால் 4% தணிக்கை கட்டணம் கணக்கிடப்பட வேண்டும்.

(A) 4 lakhs and above
4 லட்சங்களுக்கு மேல்

(B) 5 lakhs and above
5 லட்சங்களுக்கு மேல்

(C) 3 lakhs and above
3 லட்சங்களுக்கு மேல்

(D) 2 lakhs and above
2 லட்சங்களுக்கு மேல்

52. Form No. 66 helps in monitoring
படிவம் 66 மூலம் கீழ்க்கண்ட எந்த முறையில் வரவினை கண்காணிக்க இயலும்?

(A) Miscellaneous receipt
பலவகை இரசீது

(B) Rent collection
வாடகை வரவு

(C) Daily collection (Chitta)
சிட்டா (தின வசூல்)

(D) Paddy incomes
நெல் மூலம் வரவுகள்

53. Whom of the following will conduct the advisory committee meeting?
ஆலோசனைக் குழு கூட்டத்தினை கீழ்க்கண்ட யாரால் நடத்தப்படுகிறது?

(A) The Government
அரசு

(B) The Member/Secretary
உறுப்பினர் / செயலர்

(C) The Chairman
தலைவர்

(D) The Vice Chairman
துணை தலைவர்

54. Which among the following is not an assets of an institution?
கீழ்க்கண்ட எந்த இனம் திருக்கோயில் மதிப்புள்ள இருப்பு (Assets) ஆகாது?

(A) Investments
முதலீடுகள்

(B) Deposits refundable
திருப்ப வேண்டிய வைப்புதொகை

(C) Cash in hand
ரொக்க கையிருப்பு

(D) Cash in savings account
சேமிப்பு கணக்கு இருப்பு

55. The assessible income of an institution is Rs. 25,000. Find the deduction allowed in lieu of Oru Kala Pooja?
திருக்கோயிலின் நிகர வரி விதிப்பு வருமானம் ரூ.25,000 எனில் ஒரு கால பூஜை செலவாக எவ்வளவு அனுமதிக்கப்படலாம்?

(A) 2,000
(B) 3,000
(C) 1,000
(D) 5,000

56. Service Certification shall be made to every temple staff's compulsory in the month of
திருக்கோயில் பணியாளர்களின் பணிக்கால சான்று ஒவ்வொரு ஆண்டும் கீழ்க்கண்ட எந்த மாதத்தில் அவசியம் பதியப்பட வேண்டும்?

(A) January
ஜனவரி

(B) July
ஜூலை

(C) April
ஏப்ரல்

(D) June
ஜூன்

57. The person appointed in temple should furnish the security fixed within how many days on receipt of appointment order?
திருக்கோயிலில் நியமனம் செய்யப்படும் பணியாளர் கீழ்க்கண்ட எந்த காலத்திற்குள் பிணையத் தொகை (security) செலுத்துதல் வேண்டும்.

(A) one month
ஒரு மாதம்

(B) 15 days
15 நாட்கள்

(C) three months
மூன்று மாதங்கள்

(D) one week
ஒரு வார காலம்

58. The Advisory Committee meeting shall be convened by whom of the committee?
ஆலோசனை குழு கூட்டத்தினை கூட்டி நடத்தும் பொறுப்புடைய நபர் இவர் ஆவார்?

(A) Commissioner/Member Secretary
ஆணையர் / உறுப்பினர் செயலர்

(B) Assistant Commissioner
உதவி ஆணையர்

(C) Chairman
தலைவர்

(D) Non Official Member
துறை சாராத உறுப்பினர்

59. The District Committee meeting shall be convened by whom in advice of the Chairman
மாவட்டக்குழு தலைவர் ஆலோசனையின்படி மாவட்டக்குழு கூட்டம் நடத்தப்படுவதற்கு யாரால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது?

(A) Vice Chairman
துணை தலைவர்

(B) Member
உறுப்பினர்

(C) Assistant Commissioner
உதவி ஆணையர்

(D) Secretary
செயலர்

60. Auditing the accounts of the religious institution is dealt under what section of the HR and CE 1959 Act?
இந்து சமய அறநிலைத்துறையின் 1959 சட்டத்தின்படி எந்த சட்டத்தின்படி கீழ் திருக்கோயில் கணக்குகளை தணிக்கை செய்வதற்கான அதிகாரம் வரையறுக்கப்பட்டுள்ளது?

(A) Section 86
சட்டப்பிரிவு 86

(B) Section 87
சட்டப்பிரிவு 87

(C) Section 92
சட்டப்பிரிவு 92

(D) Section 95
சட்டப்பிரிவு 95

61. Payment of compensation from religious institutions is dealt under which section of the HR and CE Act?
திருக்கோயில் கணக்கிலிருந்து இழப்புத் தொகை-ஈடு செய்தல் குறித்த நடவடிக்கைகள் எந்த சட்டப்பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது?

(A) Section 71
சட்டப்பிரிவு 71

(B) Section 68
சட்டப்பிரிவு 68

(C) Section 82
சட்டப்பிரிவு 82

(D) Section 70
சட்டப்பிரிவு 70

62. Power to Pooja seva fix fees for services in the institution is dealt in which section?
பூஜை சேவைகளுக்கான கட்டணம் நிர்ணயித்தல் குறித்து கீழ்க்கண்ட எந்த சட்டத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது?

(A) Section 47
சட்டப்பிரிவு 47

(B) Section 57
சட்டப்பிரிவு 57

(C) Section 78
சட்டப்பிரிவு 78

(D) Section 58
சட்டப்பிரிவு 58

63. Which of the following head of expense is denoted under establishment charges?
கீழ்க்கண்ட செலவுகளில் நிர்வாக செலவு என்பது எந்த தலைப்பினை குறிக்கும்?

(A) Pooja expenses
பூஜை செலவு

(B) Conveyance
பயணப்படி

(C) Tax
வரிகள்

(D) Gratuity
பணிக்கொடை செலவு

64. Which of the following income should be deducted while arriving the assessible income?
கீழ்க்கண்ட எந்த வரவினை, நிகர வரி விதிப்பு கணக்கில் வரவாக எடுத்துக்கொள்ள முடியாது?

(A) Miscellaneous income
பலவகை வரவு

(B) Hundial income
உண்டியல் வரவு

(C) Rent
வாடகை

(D) Property tax refunded from Rentor
வாடகைதாரரிடமிருந்து வசூலிக்கப்பட்ட சொத்து வரி

65. Which of the following charges should be deducted while arriving the assessible income?
கீழ்க்கண்ட எந்த செலவினை நிகர வரி விதிப்பு கணக்கில் கழித்து கணக்கிடல் வேண்டும்?

(A) Miscellaneous charges
பலவகை செலவு

(B) Concert
சொற்பொழிவு

(C) Archakar share
அர்ச்சகர் பங்கு

(D) Common good fund
பொது நல நிதி

66. Miscellaneous revenue shall be monitored vide – Which of the following Form?
பலவகை வரவுகளை முறையாக கண்காணிக்க கீழ்க்கண்ட எந்த படிவம் பொருந்தும்?

(A) Form No.66
படிவம் எண். 66

(B) Form No.64
படிவம் எண். 64

(C) Form No.59
படிவம் எண். 59

(D) Form No.62
படிவம் எண். 62

67. The Annual income of the religious institution is above 5 lakhs. Then what will be the percentage of contribution fees to be levied?
ஒரு அறநிறுவனத்தின் ஆண்டு வருவாய் ரூ.5 இலட்சம் ஆகும் எனில் சகாயத்தொகை கணக்கிடுதலுக்கான விகிதம் எவ்வளவு?

(A) 9%

(B) 6%

(C) 4%

(D) 11%

68. The Cash security furnished by the temple servant newly appointed should be expended as follows
புதிதாக பணியில் சேரும் திருக்கோயில் பணியாளர்களிடம் பெறப்படும் பிணையத் தொகை (security) கீழ்க்கண்ட எந்த தலைப்பில் செலுத்தப்படும்?

(A) Kept in deposits head
வைப்பு தொகையாக்குதல்

(B) Invested
முதலீடு செய்தல்

(C) Used for Pooja purpose
பூஜை பணிக்கு பயன்படுத்துதல்

(D) Sent to Commissioner
ஆணையருக்கு அனுப்புதல்

69. When higher security is fixed to the temple staff – such additional security has to be furnished within the period of
திருக்கோயில் பணியாளர் செலுத்த வேண்டிய கூடுதல் பிணையத் தொகையினை (additional security) கீழ்க்கண்ட எந்த காலத்திற்குள் செலுத்துதல் வேண்டும்?

(A) one month
ஒரு மாதம்

(B) two months
இரண்டு மாதங்கள்

(C) one week
ஒரு வாரம்

(D) three months
மூன்று மாதங்கள்

70. Retirement means, retirement on super annuation or after completing the following service of
திருக்கோயில் பணியாளர்களுக்கான ஓய்வு பெறும் காலம் என்பது பணி மூப்பின் காரணமாகவோ அல்லது கீழ்க்கண்ட எந்த பணிக்காலத்திற்கு பிறகு ஆகும்?

(A) ten years
பத்து வருடங்கள்

(B) twenty years
இருபது வருடங்கள்

(C) twenty five years
இருபத்தைந்து வருடங்கள்

(D) fifteen years
பதினைந்து வருடங்கள்

71. The quorum of the advisory committee meeting shall be
ஆலோசனைக் குழு கூட்டத்தின் அதிகபட்ச முடிவெடுக்கும் உறுப்பினர் எண்ணிக்கை இவற்றுள் எத்தனை ஆகும்?

(A) six
ஆறு

(B) four
நான்கு

(C) five
ஐந்து

(D) eight
எட்டு

72. A trustee aggrieved by a decree of the court may appeal to the High Court within how many days?
நீதிமன்ற தீர்ப்பினை எதிர்க்கும் அறங்காவலர் கீழ்க்கண்ட எத்தனை நாட்களுக்குள் மேல்முறையீடு செய்தல் வேண்டும்?

(A) one month
ஒரு மாத காலம்

(B) sixty days
அறுபது நாட்கள்

(C) 15 days
15 நாட்கள்

(D) ninety days
90 நாட்கள்

73. Section 26 of HR and CE Act deals with
இந்து சமய அறநிலைய சட்டப்பிரிவு 26-ல் எது தொடர்பான அறிவுரைகள் கூறப்பட்டுள்ளது.

(A) Powers of Commissioner
ஆணையர் அதிகாரம் குறித்து

(B) Power's of trustees
அறங்காவலர் அகிதார வரம்பு

(C) Qualification of trustees
அறங்காவலருக்கான தகுதிகள்

(D) Powers to Math
மடங்களின் அதிகார வரம்பு குறித்து

74. The limitation of period for exercising veto power by the Commissioner on any lease is
குத்தகை ஏலம் முடிவடைந்து கீழ்க்கண்ட எத்தனை நாட்களுக்குள் ஆணையரின் இரத்தாணை பிரயோகிக்கப்படல் வேண்டும் அல்லது ஏலம் அங்கீகரிக்கப்பட்டதாக கருதப்படும்.

(A) 45 days
45 நாட்கள்

(B) 60 days
60 நாட்கள்

(C) 15 days
15 நாட்கள்

(D) 30 days
30 நாட்கள்

75. The permission for Hundial opening should be obtained from Assistant Commissioner, if the assessible income does not exceeds
கீழ்க்கண்ட எந்த நிகர வருமானம் உள்ள திருக்கோயில்களின் உண்டியல் திறப்பிற்கு உதவி ஆணையரின் அனுமதி பெறப்பட வேண்டும்.

(A) 1 lakh
ஒரு இலட்சம்

(B) 50,000
50,000

(C) 25,000
25,000 வரை

(D) 10,000
10,000 வரை

76. The Commissioner shall list out the institutions under Section 46 of the HR and CE Act based on the
சட்டப்பிரிவு 46-ன் கீழ் ஆணையரால் எதன் அடிப்படையில் திருக்கோயில்கள் பட்டியலிடப்படுகின்றன.

(A) Based on properties
சொத்தின் அடிப்படையில்

(B) Based on investments
முதலீடுகள்

(C) Based on Deposits
வைப்பு தொகை இருப்பு

(D) Annual income of the temple
திருக்கோயில் ஆண்டு நிகர வருமானம்

77. No person shall take into the temple fish, egg , meat or intoxicants as per
கீழ்க்கண்ட சட்டத்தின்படி திருக்கோயில்களுள் புலால், மீன் மற்றும் போதை பொருட்களை எடுத்து செல்லுதல் கூடாது.

(A) Tamil Nadu Act 32 of 1950
த.நா.சட்டம் 32/1950

(B) T.N. Act V of 1947
த.நா.சட்டம் V/1947

(C) Tamil Nadu Act 2 of 1971
த.நா.சட்டம் 2/1971

(D) T.N. Act 22 of 1980
த.நா.சட்டம் 22/1980

78. The receipts and charges statements of a temple whose annual income exceeds Rs. 10 lakhs shall be submitted to
ரூ.10 இலட்சத்துக்கு மேல் நிகர வருமானம் உள்ள திருக்கோயில்களின் வரவு-செலவு தொடர்பான அனைத்து அனுமதிகளும் கீழ்க்கண்ட யாருடைய அனுமதிக்கு அனுப்பப்பட வேண்டும்.

(A) The Commissioner
ஆணையர்

(B) The Asst Commissioner
உதவி ஆணையர்

(C) The Joint Commissioner
இணை ஆணையர்

(D) The Deputy Commissioner
துணை ஆணையர்

79. The Assistant Commissioner can take police assistance to remove the encroachment vide the
திருக்கோயில் இடத்தின் ஆக்ரமிப்பினை தடுக்க காவல் துறையின் உதவி அவசியமெனில் அதனை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என எந்த சட்டப்பிரிவு கூறுகிறது?

(A) Section 73 (1) of HR and CE Act
HR மற்றும் CE சட்டம் சட்டப்பிரிவு 73 (1)

(B) Section 78 (1) of HR and CE Act
HR மற்றும் CE சட்டம் சட்டப்பிரிவு 78 (1)

(C) Section 79 (1) of HR and CE Act
HR மற்றும் CE சட்டம் சட்டப்பிரிவு 79 (1)

(D) Section 77 (1) of HR and CE Act
HR மற்றும் CE சட்டம் சட்டப்பிரிவு 77 (1)

80. The Travelling allowance of the members of the Advisory Committee is met from which head of the department?
இத்துறைக்கான எந்த செலவு தலைப்பிலிருந்து, ஆலோசனை குழு உறுப்பினர்களின் பயணப்படி செலவு ஈடு செய்யப்படுகிறது?

(A) pay head
சம்பளத் தலைப்பு

(B) conveyance charges
பயணப்படி செலவு

(C) miscellaneous head
பலவகை செலவு

(D) permanent advance of the Commissioner
ஆணையம் நிரந்தர முன்பணம்

81. As per Para of manual of accounts of Hindu Religious Endowments Miscellaneous receipts granted for the offerings obtained in kind by the way of Thulabharam has to be maintained in under which one of the following Form?
துலாபாரம் மூலம் கிடைக்கப்பெறும் காணிக்கை பொருட்களுக்கு வழங்கப்படும் பலவகை ரசீதுகள் சமய நிறுவனங்களுக்கான கையேடு பத்தி-ன்படி பின்வருவனவற்றுள் எந்த படிவத்தில் பேணப்பட வேண்டும்?

(A) 5
(B) 28
(C) 8
(D) 10

82. As per Para of manual of accounts of Hindu Religious Endowments, advances are classified as under which of the following types?
சமய நிறுவனங்களுக்கான கணக்குகளின் கையேட்டின் பத்தியின் படி பின்வருவனவற்றுள் முன்பணங்கள் எத்தனை வகைப்படும்

(A) 2
(B) 5
(C) 3
(D) 7

83. As per Para of manual of accounts for Religious Endowments earnest money deposit can be collected from under which one of the following persons?
சமய நிறுவனங்களுக்கான கணக்குகளின் கையேட்டு பத்தியின் படி பொறுப்புறுதி வைப்புத்தொகையை பின்வருவனவற்றுள் யாரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டும்?

(A) Tenant
வாடகைதாரர்
(B) Leassee
குத்தகைதாரர்
(C) N.M.R. Employee
தினக்கூலி பணியாளர்கள்
(D) Bidders
ஏலதாரர்

84. As per manual of accounts for religious Endowments, under which one of the following has to be maintained in Form No. 90?
சமய நிறுவனங்களுக்கான கையேடு படிவம் எண்.90-ன்படி பின்வருவனவற்றுள் எது பேணப்பட வேண்டும்?

(A) increment certificate
ஊதிய உயர்வு சான்று
(B) personal ledger
பர்சனல் லெட்ஜர்
(C) measurement book
அளவீடு பதிவேடு
(D) contract certificate
ஒப்பந்த சான்று

85. As per Para of manual of accounts for religious endowments "original works" includes under which one of the following?
சமய நிறுவனங்களுக்கான கணக்குகளின் கையேடு பத்தியின் படி அசல் பணி என்பது பின்வருவனவற்றுள் எதனை உள்ளடக்கியது?

(A) Maintenance of building
கட்டிடங்களை பராமரித்தல்

(B) Renovation of temple
திருக்கோயிலை புதுப்பித்தல்

(C) Renovation of Vahanams
வாகனங்களை புதுப்பித்தல்

(D) New constructions
புதிய கட்டுமானங்கள்

86. As per Para of manual of accounts of religious endowments the rates provided in the estimates should agree with the under which one of the following?
சமய நிறுவனங்களுக்கான கணக்குகளின் கையேடுபடி மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விலை வீதங்கள் பின்வருவனவற்றுள் எதனுடன் ஒத்துபோக வேண்டும்?

(A) measurements
அளவீடு

(B) schedules of rates
விலை வீத விவரப்பட்டியல்

(C) check measurement
மேல் அளவீடு

(D) specification
விவரக் குறிப்பீடு

87. A servant of a Religious institution should claim his travelling allowance under which one of the following Form?
சமய நிறுவனத்தின் பணியாளர் தனது பயணப்படி கோரிக்கையினை பின்வருவனவற்றுள் எந்தப்படிவத்தில் கோரப்பட வேண்டும்

(A) 79

(B) 35

(C) 20

(D) 60

88. Register for money orders and other valuables received by post should be maintained in under which one of the following Form?
அஞ்சல் ஆணை மற்றும் அஞ்சல் மூலமாக பெறப்படும் விலையுயர்ந்தவைகளுக்கான விவரப்பதிவேடு பின்வருவனவற்றுள் எந்தப் படிவத்திலான படிவத்தில் பேணப்பட வேண்டும்?

(A) 50

(B) 48

(C) 62

(D) 32

89. Certificate of physical verification regarding the face/money valued forms should be furnished in stock account maintained prescribed form by the trustee of a religious institution under which one of the following period?
சமய நிறுவனங்களின் முக/பணமதிப்புள்ள படிவங்கள் தொடர்பான நேரில் சரிபார்ப்பு சான்றிதழ், நிர்வாகியால் அதற்கான உரிய படிவத்தில் பேணப்படும் இருப்புக்கணக்கு பதிவேட்டில் எப்போது வழங்கப்பட வேண்டும்?

(A) Every month
ஒவ்வொரு மாதமும்

(B) Once in 3 month
மூன்று மாதங்களுக்கு ஒரு முறை

(C) Once in 6 month
ஆறு மாதங்களுக்கு ஒரு முறை

(D) Once in half year
அரையாண்டுக்கு ஒரு முறை

90. As per manual of accounts for Religious Endowments, Travellers bungalow Choultry book has to be maintained in under which one of the following Form?
விருந்தினர் மாளிகை மற்றும் சத்திரங்கள் பதிவேடு சமய நிறுவனங்களுக்கான கையேடு படி பின்வருவனவற்றுள் எந்தப் படிவத்தில் பேணப்பட வேண்டும்?

(A) 75

(B) 68

(C) 27

(D) 43

91. Which one of the following is not ear–marked funds?
பின்வருவனவற்றுள் எது குறிப்பிட்ட ஒதுக்கீடு தொகை கிடையாது?

(A) loan amounts
கடன் தொகை

(B) interest amount for vehicle loan
ஊர்தி கடனுக்கான வட்டி

(C) staff security deposit
பணியாளர் பிணைவைப்பு தொகை

(D) specific endowments
குறிப்பிட்ட கட்டளை

92. Transfer entry voucher has to be maintained in under which one of the following Form No.?
மாறுதல் பதிவு செலவுச்சீட்டு பின்வருவனவற்றுள் எந்தப் படிவத்தில் பேணப்பட வேண்டும்?

(A) 15

(B) 16

(C) 17

(D) 18

93. Under which one of the following Para No. of manual of accounts of religious endowments payments should ordinarily be made by cheque?
பின்வருவனவற்றுள் எந்தப்பத்தியின்படி சாதாரணமாக செலுத்துகைகள் காசோலைகள் மூலமாக மேற்கொள்ளப்பட வேண்டும்?

(A) 242

(B) 2

(C) 300

(D) 150

94. As per manual of accounts for religious endowments fodder register of cattles has to be maintained in under which one of the following Form No.?
சமய நிறுவனங்களுக்கான கணக்கு நடைமுறை பதிவேட்டின் படி கால்நடைகளுக்கான தீவண பதிவேடு பின்வருவனவற்றுள் எந்தப் படிவத்திலான படிவத்தில் பேணப்பட வேண்டும்?

(A) 39
(B) 36
(C) 75
(D) 63

95. Incase Ubhaya expenditure exceeds the Ubhaya receipts, while raising the audit objection regarding the same under which one of the following Para No. of manual of accounts for religious endowments should be quoted in objection?
உபய வரவைவிட உபய செலவு அதிகமாக இருப்பின் சமய நிறுவனங்களுக்கான கணக்கு நடைமுறை நூலின் பின்வருவனவற்றுள் எந்த பத்தியை குறிப்பிட்டு மறுப்பு எழுப்பப்பட வேண்டும்?

(A) 25
(B) 42
(C) 36
(D) 178

96. A duplicate copy of inventory register for gold, silver, jewels and other valuables should be kept under which one of the following Para of manual of accounts for religious endowments?
பின்வருவனவற்றுள் சமய நிறுவனங்களுக்கான கணக்கு நடைமுறை நூலின் எந்தப் பத்தியில் நகைகள் மற்றும் விலையுயர்ந்தவைகளுக்கான இன்வெண்டரி பதிவேட்டின் இரண்டாவது நகலை வைத்துக்கொள்ள வேண்டும்?

(A) 43
(B) 75
(C) 67
(D) 212

97. Under which one of the following register has to be maintained in Form No. 27 of manual of accounts for religious endowments?
பின்வருவனவற்றுள் எந்த பதிவேடு சமய நிறுவனங்களுக்கான கையேட்டின் படிவம் எண் 27-ன்படி பேணப்பட வேண்டும்.

(A) uncurrent coins register
செலவாணியாக நாணயங்கள் பதிவேடு
(B) stock register for jewels and valuables
நகைகள் மற்றும் விலையுயர்ந்தவைகளுக்கான இருப்பு பதிவேடு
(C) post stage stock account register
அஞ்சல் வில்லை இருப்பு கணக்கு பதிவேடு
(D) works register
பணிகள் பதிவேடு

98. Under which one of the following register has to be maintained in Form No. 9 of manual of accounts for religious endowments?
சமய நிறுவனங்களுக்கான கணக்குகளின் கையேடுபடி பின்வருவனவற்றுள் எந்த பதிவேடு படிவம் எண்.9-ன்படி பேணப்பட வேண்டும்.

(A) Investment register
முதலீடு பதிவேடு

(B) Deposit register
வைப்புத்தொகை பதிவேடு

(C) Khanikai register
காணிக்கை பதிவேடு

(D) Auction register
ஏலப்பதிவேடு

99. As per manual of accounts of religious endowments unclaimed deposits should be lapsed and merged with general accounts after expiry of under which one of the following period?
கோரப்படாத வைப்புத்தொகையை சமய நிறுவனங்களுக்கான கையேடுபடி பின்வருவனவற்றுள் எவ்வளவு காலம் கடந்த பிறகு பொதுக் கணக்கில் சேர்க்கப்பட வேண்டும்?

(A) after completion of one year from the date of payment
செலுத்தப்பட்ட நாளிலிருந்து ஓராண்டிற்கு பிறகு

(B) after completion of three fasalis from the date of payment
செலுத்தப்பட்ட நாளிலிருந்து மூன்று பசலிகள் முடிந்த பிறகு

(C) after completion of five fasali from the date of payment
செலுத்தப்பட்ட நாளில் இருந்து 5 பசலிகள் பிறகு

(D) after completion of five months from the date of payment
செலுத்தப்பட்ட நாளில் இருந்து 5 மாதங்களுக்கு பிறகு

100. As per manual of accounts for religious endowments contractor's ledger (or) personal ledger has to be maintained in under which one of the following Form?
சமய நிறுவனங்களுக்கான கணக்குகளின் கையேட்டின் படி ஒப்பந்ததாரர் பேரேடு அல்லது தனி பேரேடு பின்வருவனவற்றுள் எந்த படிவத்தில் பேணப்பட வேண்டும்?

(A) 90

(B) 92

(C) 93

(D) 91